

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூலை 28, 2022 | புரட்சி 21 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00


## மூன்று நாள்கள் திருச்சியில் விவாதங்களுடன் நடந்தன

# களப்பணியாளர்களுக்கு கழகம் பயிற்சி வகுப்புகள்





***திராவிடர் விடுதலைக் கழகத்தின் களப் பணியாளர்கள் 47 பேருக்கு பயிற்சி முகாம், திருச்சி டான்பாஸ்கோ மீடியா அரங்கில் ஜூலை 23, 24, 25 தேதிகளில் நடைபெற்றது. பல்வேறு தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டதோடு விவாதங்களுடன் நடந்தன.***

**முதல் நாள்:** கொள்கை முன்னெடுப்பில் பெரியாரின் அணுகு முறைகள் - விடுதலை இராசேந்திரன், பெண்ணியம்/LGPTQ - ஆசிரியர் சிவகாமி, தமிழ் வளர்ச்சியில் பெரியாரின் தொண்டு - பால் பிரபாகரன், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் / போதாமைகள்/ஆணவக் கொலைகள் - திண்டிவனம் இரா.முருகப்பன்.

**இரண்டாம் நாள் :** பெரியாரும் அயோத்திதாசரும் / அம்பேத்கர்/ எம்.சி. இராஜா / இரட்டைமலை சீனிவாசன் /சகஜானந்தா ஆகியோரும் - கொளத்தூர் மணி, மக்கள் உளவியலும் கொள்கை பரப்புரைகளும் - மருத்துவர் சிவபாலன், இந்திய ஒன்றியமும் தமிழர் தன்னாட்சியும் - ஆ.வந்தியத்தேவன் (மதிமுக), ஆர்.எஸ்.எஸ். பண்பாட்டுப் புரட்டுகள் - விடுதலை இராசேந்திரன்.

**மூன்றாம் நாள் :** பாஜக எட்டு ஆண்டுகளின் குளறுபடிகள் - இளந் தமிழகம் செந்தில், தமிழ்த்தேசியர்கள் பொய்யுரைகள்/ கற்பிதங்கள் - வாலாசா வல்லவன்(மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி), தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்தின் தாக்கம் - வெற்றிச் செல்வன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை)

- என, மூன்று நாட்களும் வகுப்புகள் குறித்த நேரத்தில் நடைபெற்றன.

ஒவ்வொரு நாளும் வகுப்புகள் முடிந்த பின், இரவில் தோழர்களின் விவாதங்கள் நடைபெற்றன.

# கழகத் தோழர்களுக்கு இணையதள பயிலரங்கம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் இணையதள பயிலரங்கம் திருச்சி டான் போஸ்கோ மீடியா அரங்கில் 22.07.22 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் தொடங்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

முதல் நிகழ்வில் கழக சமூக ஊடக பொறுப்பாளர் பரிமளராசன் அறிமுக உரையாக பெரியார் காலத்தில் இருந்த பரப்புரை வடிவங்களும், காலமாற்றத்தில் பரப்புரை வடிவங்களின் மாற்றங்களும், தற்போதைய சூழலில் நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளின் தாக்கங்கள் குறித்தும், சமூக ஊடகங்களில் கழகத் தோழர்கள் பணியாற்றுவது குறித்தும் பேசினார்.

பயிலரங்கின் சிறப்பு அழைப்பாளரான ‘யூடர்ன்’ வலைத்தளத்தின் உரிமையாளரும், பத்திரிக்கையாளர், குறும்பட தயாரிப்பாளர் ‘யூ டியுபர்’ அயன் கார்த்திகேயன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

செய்தி ஊடகங்கள் ஒளிபரப்பும் செய்திகளின் உண்மை தன்மைகளை எப்படி கண்டறிவது மற்றும் செய்திகளை போலியாக உருவாக்கி எப்படி கட்டமைக்கிறார்கள் என்பது குறித்தும் இவற்றை நாம் எவ்வாறு அடையாளம் கண்டு பிரித்துப் பார்ப்பது என்பது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு கழகத்தின் இணையதள பொறுப்பாளர் விஜயகுமார் காணொளி வடிவில் ட்விட்டர் செயல்பாடு குறித்தும் கழகத்தின் இணையதளத்தில் உள்ள விபரங்கள், புத்தகங்கள், காணொளிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். பங்கேற்ற தோழர்களுக்கு புதிய டிவிட்டர் கணக்கை துவங்கி அதில் பதிவிடுவது குறித்து நேரடியாக செயல்முறையுடன் விளக்கினார்.

தொடர்ந்து கழகத்தின் மதுரை மாவட்டச் செயலாளர் மணியமுதன். மா.பா. புதியதாய் ‘யூடியூப்’ ஆரம்பிப்பது எப்படி என விளக்கினார். பின் ‘யூடியூப்’ இயங்கும் விதம் குறித்தும் அதனை எப்படி பயன்படுத்த வேண்டும் அதில் உள்ள



தொழில்நுட்ப விபரங்களை காணொளியின் மூலம் விரிவாக எடுத்துக் கூறினார். அலைபேசியிலேயே மீம்ஸ் உருவாக்குவது, படங்களை எடிட் செய்வது குறித்தும் அதற்கான மென்பொருட்கள் குறித்தும் விளக்கினார்.

தோழர்களின் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் பரிமளராசன், விஜயகுமார், மணியமுதன் ஆகியோர் விளக்கங்கள் அளித்தனர்.

நிறைவாக கலந்து கொண்ட தோழர்கள் கருத்தரங்கு குறித்து தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். தோழர்கள் இக்கருத்தரங்கு புதிய பல தகவல்களை அறிந்து கொள்ள உதவியது என்று கூறினார்கள்.

முடிவில் கழகத்தின் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் உரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. இக்கருத்தரங்கில் கழகத் தோழர்கள் 54 பேர் கலந்து கொண்டனர்.

## பாராட்டத்தக்க முடிவு: அரசுப் பள்ளிகளில் பெரியார் வினா–விடை

பெரியார் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பெரியார் 1000 வினா விடை நிகழ்ச்சிகளை மாணவர்களுக்கு நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது, உண்மையிலேயே பாராட்டி வரவேற்கத்தக்க வேண்டிய நிகழ்வாகும். ஆகஸ்டு 19, 20, 21 தேதிகளில் இந்தப் போட்டியை நடத்த வேண்டுமென அந்த ஆணையம் கூறியிருக்கிறது.

தமிழ்நாட்டில், தமிழ்நாட்டு மாணவர்கள் இட ஒதுக்கீட்டின் கீழ் படித்துக் கொண்டிருந்தாலும் அதனுடைய வரலாறு அவர்களுக்குப் புரியவில்லை. எந்த இட ஒதுக்கீட்டின் கீழ் அவர்கள் படிக்கிறார்களோ, அந்த இட ஒதுக்கீட்டிற்கு தமிழ்நாட்டில் நடைபெற்ற போராட்டத்தைப் பற்றிய வரலாற்றுப் புரிதல்களும் அவர்களுக்கு இல்லை.

எனவே தமிழ்நாட்டினுடைய சமூக நீதி வரலாறு, சமூக நீதிக்காக தமிழ்நாட்டில் நடைபெற்ற போராட்டக் களங்கள், தமிழ்நாட்டின் சமூகச் சூழ்நிலை, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி குறித்த சிந்தனைகளை பள்ளி மாணவர்களிடத்திலே விதைக்கப்பட வேண்டியது, மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

இந்துத்துவ சக்திகள், உண்மைக்கு மாறான, வரலாற்றுக்குப் புறம்பான, மத வெறியைத் தூண்டக்கூடிய மதவெறிகளைப் பரப்பக்கூடிய ஏராளமான பாடங்களை திணிக்கக் கூடிய நிலையில், உண்மையான சமூக நீதி வரலாற்றையும், தமிழகத்தினுடைய தனித்துவத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டியது திராவிட மாடல் அரசின் தலையாய கடமை.

அந்தக் கடமையை செய்வதற்கு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை வந்திருப்பதை உண்மையிலேயே பாராட்டி வரவேற்கிறோம்.

# மதம் மரணத்துக்கா? மனித சமூகத்துக்கா?

'அக்னி பாத்' திட்டத்துக்கு வடமாநிலங்களில், இளைஞர்கள் பலரும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். ஆனாலும், எதிர்ப்புகளை புறந்தள்ளி திட்டம்நிறைவேறத் தொடங்கியுள்ளது. இந்த அக்னிபாத் திட்டத்தில் நான்காண்டுகள் பயிற்சி பெற்று வருபவர்களுக்கு அரசு வேலை உத்திரவாதம் எதையும் தராது. ஏற்கெனவே இராணுவத்தில் இருக்கின்றவர்களுக்கான சலுகைகளும் இவர்களுக்குக் கிடையாது. எனவே, அக்னிபாத் திட்டம் என்பது வேறு; இராணுவத்தில் பணியாற்றுவது என்பது வேறு. இந்த அக்னிபாத் திட்டத்திலும் இட ஒதுக்கீடு கிடையாது. இராணுவத்திலும் இட ஒதுக்கீடு கிடையாது. இட ஒதுக்கீடே கிடையாது என்கிறபோது ஜாதி, மத அடையாளங்களை ஏன் விண்ணப்பத்தில் கேட்க வேண்டும் ? அக்னிபாத் திட்டத்திற்கு ஜாதி, மத அடையாளங்கள் விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ளன. எதற்காக இந்த கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள்? ஒரு குறிப்பிட்ட மதத்தினரை சேர்ப்பதற்காக கேட்கிறீர்களா ? அல்லது ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் மட்டும் இராணுவத்தில் சேர்வதற்காக கேட்கிறீர்களா ? என்று வட நாட்டில் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

அரசு இதற்கு ஒரு விளக்கம் கூறுகிறது. இராணுவத்தில் ஏற்கெனவே ஜாதி, மதம் கேட்கிற பழக்கம் இருந்து கொண்டு இருக்கிறது. அதைத்தான் இப்போதும் கேட்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இராணுவத்தில் அந்தப் பழக்கம் இருந்திருக்கலாம். ஆனால், அக்னிபாத், இராணுவம் இரண்டும் ஒன்றல்ல என்று ஆகிவிட்டதற்குப் பிறகு, இதிலும் இட ஒதுக்கீடு இல்லை என்று கூறிவிட்டப் பிறகு , இராணுவத்தில் ஜாதி, மதம் கேட்கிற முறையை அக்னிபாத் திட்டத்திலும் இவர்கள் ஏன் பின்பற்ற வேண்டும் ?

அரசு ஒரு பதிலை கூறுகிறது. "இராணுவத்தில் இறந்து போனவர்கள், இறந்த போன பிறகு அவர்களை அடக்கம் செய்வதற்கு எந்த மதத்தின் சடங்கு படி அடக்கம் செய்வது என்பதற்காகத்தான் மதத்தைக் கேட்கிறோம்" என்று கூறுகிறார்கள். மதத்தின் அடையாளம் என்பது இறந்து போனவர்களுக்காக சடங்குகளை செய்வதற்காகத்தான் என்ற முறை இராணுவத்தில் பின்பற்றப்படுகிறது.

அதே ஒன்றிய பாஜக ஆட்சி அரசியலில் என்ன செய்து கொண்டிருக்கிறது ? மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்துகிறது. நாட்டை மதத்திற்குப் பயன்படுத்துகிறது. சமூகத்தை மதத்தின் அடிப்படையால் கூறுபோடுகிறது, ஜாதியின் அடிப்படையால் பிளவுபடுத்துகிறது, பிற மதத்தினர் மீது மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுகிறது. அரசியல் சட்டத்தில் மதவாத அரசியலுக்காக, பல்வேறு திருத்தங்களை கொண்டு வருகிறது, காஷ்மீர் மக்களின் உரிமையை மறுக்கிறது. இவ்வளவுக்கும் மதம் இன்றைக்கு பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இராணுவத்தில் மதம் என்பது இறந்தவர்களுக்கான சடங்குகளுக்கு மட்டுமே. நிஜ வாழ்க்கையிலும் இறந்தவர்களுக்கான சடங்குகளுக்கு மட்டும் மதம் இருக்குமென்று சொன்னால், எந்தத் தொல்லையும் சமூகத்தில் இல்லாமல் போயிருக்குமே. ஆனால், சமூகத்தை அரசியலை ஏன் மத அடிப்படையில் கொண்டு வந்து நாட்டை மதக் காடாக மாற்றுகிறீர்கள் ? என்ற கேள்விக்கு ஒன்றிய அரசு பதில் சொல்லியாக வேண்டும்.

# சத்துணவில் 'சனாதனம்': முட்டைக்குத் தடை?

வைதீக மதம் அசைவ உணவை முழுமையாக வெறுக்கிறது. அசைவ உணவை சாப்பிடாமல் இருப்பது தான் இந்து தர்மம் என்று கருதுகிறது. அதனால் தான் பார்ப்பனர்கள் அசைவ உணவை வெறுக்கிறார்கள். ஆனால், குழந்தைகளுக்கு புரதச் சத்து கண்டிப்பாக வேண்டும் என்ற அடிப்படையில் மதிய உணவுத் திட்டத்தில் முட்டை போடப்பட்டு வருகிறது.

கர்நாடகத்தில் நடைபெற்று வருகிற பாரதிய ஜனதா கட்சி வைதீகப் பார்ப்பனியக் கொள்கையை ஏற்று, "குழந்தைகளுக்கு முட்டை போடுவது அவர்களுடைய ஆரோக்கியத்துக்கு எதிரானது, கொழுப்புச் சத்தை குழந்தைகளுக்கு உருவாக்கும், ஹார்மோன் பிரச்சனைகளை உருவாக்கும்" என்று ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது.

கர்நாடகத்தில் பாடத்திட்டத்தை எப்படி அமைப்பது என்று உருவாக்கப்பட்ட ஒரு குழு, பாடத் திட்டத்தையும் தாண்டி மதிய உணவுத் திட்டத்திற்கும் ஒரு பரிந்துரையை வழங்கியிருக்கிறது. அதில் தரப்பட்ட பரிந்துரைதான் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தில் முட்டை போடக்கூடாது என்பதாகும்.

இந்த அறிக்கை கர்நாடக அரசிடமும், NCERT என்று சொல்லப்படுகின்ற தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திடமும் அந்தக் குழு சமர்ப்பித்திருக்கிறது. இது ஒரு மிக மிக மோசமான முடிவாகும்.

இந்துத்துவா என்ற பெயரில் சனாதன தர்மத்தை அவர்கள் பேசுகிறார்கள். சனாதன தர்மம் என்பது பார்ப்பன தர்மம் தான் என்பதற்கு கர்நாடக அரசின் அந்தக் குழு வெளியிட்டிருக்கிற அறிக்கையே சான்றாக இருக்கிறது.

உ.பி.யில் பாஜக ஆட்சியை மிஞ்சக் கூடிய அளவிற்கு கர்நாடக பாஜக ஆட்சி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சனாதன திட்டத்தை அறிவித்துக் கொண்டே இருக்கிறது. அறிவியலாளர்கள், மருத்துவர்கள் இந்தக் கருத்தை அடியோடு மறுக்கிறார்கள்.

முட்டை என்பது கொழுப்புச் சத்து அல்ல. அது முழுமையான புரதச் சத்து. குழந்தைகளுக்கு அவசியமான தேவை. 25 ஆண்டுகளாக இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மதிய உணவுத் திட்டத்தில் முட்டை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று முட்டையினுடைய புரதச் சத்தின் தன்மைகளை விளக்கி விரிவான கட்டுரை ஒன்றை 'தமிழ் இந்து' ஏட்டில் மருத்துவர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

இறைச்சி, மீன் சாப்பிடுவதற்குக்கூட 'சனாதனத்தின்' தடை கேட்கும் காலம் வந்தாலும் ஆச்சரியமில்லை. முட்டையை மதிய உணவுத் திட்டத்திலிருந்து அகற்ற போலி அறிவியல் காரணங்களைக் கூறுவதற்கு அரசு சார்பில் குழு நியமிக்கப்படுவதே வெட்கக் கேடானது.

நாளை மீண்டும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டை பார்ப்பன மதத்திற்கு எப்படி இழுத்துச் செல்லும் என்பதற்கு கர்நாடக அரசு அரங்கேற்றும் கேலிக்கூத்துகள் இருந்து கொண்டிருக்கின்றன.

# அரிசி, பருப்புக்கு ஜிஎஸ்டி வரி: தவறான செய்திக்கு நிதியமைச்சர் மறுப்பு

அரிசி, தயிர் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் மீது ஜிஎஸ்டி வரி விதிக்க தமிழ்நாடு அரசு எதிர்ப்பு தெரிவித்தது என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது: அரிசி உள்ளிட்ட, பேக்கிங், லேபிள் செய்யப்பட்ட பல உணவுப் பொருட்கள் மீது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்டது குறித்து பல்வேறு தவறான செய்திகள் உலவி வருகின்றன. ஆதலால் இந் நிகழ்வு குறித்த உண்மை நிலையை தெரிவிப்பது அவசியமாகும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 45 வது கூட்டத்தில் முடிவு செய்தவாறு, பின்வரும் இனங்களை பரிசீலித்து, பரிந்துரைகளை அளித்திட அமைச்சர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

வரி விகி தங்களை எளிமைப்படுத்தி வரி கட்டமைப்பினை சீரமைத்தல். தற்போதைய வரி விகிதங்களை மறு ஆய்வு செய்து வரி வருவாயினைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்தல்.

இக்குழுவில் கர்நாடகா மாநில முதல்வர் ஒருங்கிணைப்பாளராக வும், பீகார், கோவா, கேரளம், ராஜஸ் தான், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்காள மாநில அமைச்சர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இக்குழுவில் தமிழ்நாடு உறுப்பினராக இடம் பெறவில்லை.

இக்குழு தனது பரிந்துரைகளை அளித்த பின்னர், அப்பரிந்துரைகள் மீதான மாநில அரசுகளின் கருத்து கள் கேட்கப்பட்டன.

அரிசி, தயிர், மோர் மற்றும் வெல்லம் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் மீதான வரி சாமானிய மக்களை பாதிக்கும் என்பதால் இவை மீதான வரி விதிப்பு குறித்த முன் மொழிவுகளை ஏற்றுக் கொள்ள இயலாது என தமிழ்நாடு அரசால் 20.06.2022 நாளிட்ட கடித எண் 12680/ 2021இல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திற்கு எழுத்துப்பூர்வ மாக உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் அளவில் நடைபெற்ற கூட்டங்களிலும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதியால் இதே கருத்து வலியுறுத்தப்பட்டது.

2022 ஜூன் 28, 29 ஆகிய நாட்களில் சண்டிகரில் நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றத்தின் 47 ஆவது கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட அமைச்சர்களின் குழுவால் சமர்ப்பிக் கப்பட்ட 56 பரிந்துரைகள் கொண்ட இடைக் கால அறிக்கை மன்றத்தின் ஒப்புத லுக்கு வைக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அனைத்தையும் நிராகரிக்க வேண்டும் என்ற முடிவு சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றத்திற்கு முன்வைக்கப் பட்டது.

விவாதத்திற்கு பின், அமைச்சர்கள் குழுவின் இடைக்கால அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. வரி விதிப்பு குறித்து மூன்று கட்டங்களில் இவ்வாறு முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளதை ஒன்றிய நிதி அமைச்சரே குறிப்பிட்டுள்ளார். உண்மை நிலை இவ்வாறு இருக்க அரசியல் காரணங்களுக்காக பல்வேறு தவறான செய்திகளை சிலர் பரப்பி வருவது கண்டிக்கத்தக்கதாகும்.

தமிழ்நாடு தனது எதிர்ப்பைத் தெரிவித்த பின்னரும், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் கருத்தொற்றுமை முடிவின்படி விதிக்கப்பட்டுள்ள வரி யால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து, தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்த உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் தெரிவித்துள் ளார்.

## வினா – விடை

- எய்ம்ஸ் மருத்துவமனைகளில் தகுதியுள்ள எஸ்.எஸ்.டி. ஆசிரியர்களைக் கூட பணிக்கு சேர்ப்பதில்லை.
  **– நாடாளுமன்ற நிலைக்குழு**

  அது தான் ஜனாதிபதவிக்கே ஒருத்தர நியமிச்சுட்டமே அப்றம் என்ன?

- சபாநாயகர் அப்பாவு கிறிஸ்துவ பாதிரியார்களைப் புகழ்ந்து பேசுவதா? **– பாஜக பொருளாளர் சேகர்**

  ஆமாம்; இந்து நித்தியானந்தாவையும், இந்து மோடியையும் தான் புகழ வேண்டும். அது தான் மதச்சார்பின்மை.

- கங்கையை தூய்மைப்படுத்தும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை.
  **– பசுமைத் தீர்ப்பாயம்**

  புரோகிதர்களை அழைத்து மந்திரங்களை ஓதிப் பாருங்களேன்; தீட்டு கழிந்து தூய்மையாகிவிடும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் தான் அதிகாரமிக்கவர்.
  **– கே.எஸ்.அழகிரி**

  அதுசரி, காங்கிரச எப்போது அதிகாரபடுத்தப் போறீங்க

- நாடாளுமன்றத்தில் பயன்படுத்தக் கூடாத கெட்ட வார்த்தைகள் பட்டியல். **–சபாநாயகர் அறிவிப்பு**

  அந்தப் பட்டியல்ல நாடாளுமன்றத்தையும் சேத்துக்கோங்க.

## பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை

# வரலாற்று அணியை உருவாக்கி தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும்

*மார்ச் 20, 2022 அன்று தமிழ்த் தேச நடுவம் சார்பில் ‘பாவலரேறு தமிழ்க் களத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஸை தடை செய்ய வேண்டும் – ஏன்?’ என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையின் சுருக்கம்: (சென்ற இதழ் தொடர்ச்சி)*

தமிழ் நாட்டில் தமிழ் தெரியாமலேயே தேர்வாணைய தேர்வுகளை எழுத அனுமதித்தார், முதல்வராக இருந்த ஓ. பன்னீர்செல்வம். தேர்ச்சி பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தமிழில் தேர்ச்சி பெற்றால் போதும் என்ற அரசாணை பிறப்பிக்கச் செய்தார். தமிழ் தெரியாத பலர், தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பிடித்து விட்டனர். ஜெயலலிதா மறைந்தவுடன் முதல்வராக அவர் பதவியேற்றக் காலத்தில் இப்படி ஒரு விபரீத முடிவு எடுக்கும் நிர்ப்பந்தம் அவருக்கு எதனால் ஏற்பட்டது என்பது நமக்குத் தெரியவில்லை.

இப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ்த் தேர்வு - தேர்ச்சி - தமிழ்நாட்டில் அரசுத் தேர்வாணையத்தின் வழியாக தேர்வு எழுதும் அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. திராவிட ஆட்சி தமிழருக்கு என்ன செய்தது என்று குற்றம் சாட்டி வந்த பல தமிழ்த் தேசிய அமைப்புகள் நியாயமாக இந்த முடிவை வரவேற்று பாராட்டியிருக்க வேண்டும். ஆனால் பல அமைப்புகள் ‘கள்ள மவுனம்’ சாதித்தன. ‘திராவிடம்’ என்ற சொல்லே தமிழ்நாட்டில் பல தேசிய அமைப்புகளுக்கு ஒவ்வாமையாக இருக்கிறது. இதில் மற்றொரு கருத்தையும் சுட்டிக்காட்டியாக வேண்டும். தமிழ் இலக்கியச் சிறப்புக்காகவும் இன அடையாளத்துக்காகவும் நாம் தமிழைப் பாராட்டி வந்திருந்தால் இப்போது சமூக நீதிக்கு தமிழ் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பிற மாநிலத்தவர் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்புகளைப் பறிப்பதைத் தடுத்து நிறுத்த தமிழ் சமூக நீதிக் கருவியாக மாற்றப்பட்டிருக்கிறது.

பெரியார் இயக்கம் அரசியல் பதவிக்குப் போகாத இயக்கம். இந்த ஆட்சியை இன்றைய ஆபத்தான கட்டத்தில் உறுதியாக ஆதரிக்க வேண்டும் என்பதே எங்கள் நிலை. தமிழ்நாட்டிலிருந்து தான் ஒன்றிய பா.ஜ.க.வின், பார்ப்பனியத் திணிப்பு, மாநில அடையாள அழிப்புக்கான குரல் கேட்கிறது. எனவே இந்த ஆட்சியை உறுதியாக ஆதரிக்க வேண்டியது கொள்கை ரீதியான கடமை. பெரியார், எப்படி காமராசர் ஆட்சியை தலையில் சுமந்தாரோ, அதே நிலையைத்தான் நாங்கள் எடுத்திருக்கிறோம். காமராசர் ஆட்சியில் அரசியல் சட்டத்தின் ஜாதி காக்கும் பிரிவுகளை எரித்த போராட்டத்தில் கிரிமினல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட பெரியார் இயக்கத் தொண்டர்கள் சிறையில் சொல்ல முடியாத அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர். மோசமான உணவுகளால் ஏராளமானோர் உடல் நலிவுற்றனர். சிறைத் தண்டனையின்போதே இரு தோழர்கள் பட்டுக்கோட்டை இராசாமி, மணல் மேடு வெள்ளைச்சாமி வீரமரணமடைந்தனர்.

6 மாதம், ஒரு வருட சிறைத் தண்டனை, விடுதலையான ஒரு மாதத்துக்குள்ளேயே 20க்கும் மேற்பட்ட தோழர்கள் உடல் நலிவுற்று மரணத்தைத் தழுவினர். பெரியார் அத்தனையும் பொறுத்துக் கொண்டு சமுதாய நலனுக்காக காமராசரையே ஆதரித்தார். பெரியாரின் அணுகுமுறைதான் எங்களை வழி நடத்துகிறது. அதே நேரத்தில் தைப்பூச பண்டிகையை அறநிலையத் துறை கோயில்களுக்கு வெளியே அரசு விழாவாகக் கொண்டாடத் திட்டமிட்டபோது,

- *பா.ஜ.க.வும் சங்கிகளும் இந்து பண்பாடு ஒழுக்கம் சார்ந்து செயல்படுகின்றனரா?*
- *ஜாதிக் குழுக்களை கட்சிக்குள் இழுக்கும் சதி.*
- *முறியடிக்க நாம் எத்தகைய எதிர் பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டும்?*

இது அறநிலையத் துறையின் வேலை அல்ல என்று நாங்கள் தான் முதல் எதிர்ப்புக் குரலை எழுப்பினோம். அதன் காரணமாக அறநிலையத் துறை அமைச்சரின் அந்த நடவடிக்கை சென்னையோடு நிறுத்தப்பட்டது. ஏனைய ஊர்களில் நடக்கவில்லை. ஒன்றிய பா.ஜ.க., தமிழ்நாட்டை குறி வைத்து எதைச் செய்தாவது பெரியார் மண்ணை காவிமயமாக்க பார்ப்பன மயமாக்க துடித்துக் கொண்டிருக்கும் நிலையில் இதைத் தடுத்து நிறுத்த என்ன செய்யப் போகிறோம்? என்ன திட்டங்களை வகுக்கப் போகிறோம் என்பதுதான் நம் முன் எழுந்து நிற்கும் கேள்வி.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு பெயர்களில் தமிழ்நாட்டில் களமிறங்கியிருக்கிறார்கள். இந்து வர்ணாஸ்ரமம் கட்டமைத்த ஜாதியை தங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டு ஒவ்வொரு ஜாதிக் குழுவுக்கும் வலைவீசி தங்கள் பிடிக்குள் கொண்டு வருகிறார்கள். சில ஜாதித் தலைவர்களுக்குப் பணத்தை அள்ளி வீசுகிறார்கள். இது ஒரு பக்கம்; மற்றொரு பக்கம் கட்சிகளைப் பிளக்கிறார்கள். அ.இ.அ.தி.மு.க.வைப் பல கூறுகளாக உடைத்து விட்டார்கள். அவர்கள் செய்த ஊழல்களை ஆட்சியில் இருந்த காலத்தில் செய்த முறைகேடுகளைக் காட்டி மிரட்டுகிறார்கள். பா.ஜ.க.வை எதிர்த்தால் மாட்டிக் கொள்வோம் என்று அஞ்சி நடுங்கி அ.தி.மு.க.வின் அத்தனைப் பிரிவுகளும் வாய் மூடிக் கொண்டு தி.மு.க.வை மட்டும் குறி வைத்து தாக்குகின்றன. அல்லது தங்கள் அணிகளுக்குள் மாறி மாறி சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க.வினர் தயவைப் பெறுவதற்கு போட்டிப் போடுகிறார்கள்.

ஒவ்வொரு பகுதியிலும் சமூக விரோத சக்திகளைத் தேடிப் பிடித்து பா.ஜ.க.வில் இணைந்து வருகிறார்கள். கிரிமினல் குற்றச் சாட்டுகளின் கீழ் பல பா.ஜ.க.வினர் கைது செய்யப்படுவது அன்றாட செய்தியாகிவிட்டது.

‘இந்துப் பண்பாடு’, ‘இந்து மத பக்தி’, ‘மத ஒழுக்கம்’ என்ற நற்பண்புகளை வளர்ப்பதற்காகவே இந்துக்கள் ஆட்சி வரவேண்டும் என்று கூறுகிறோம் என்று ஒரு பா.ஜ.க.வினரால்கூட துணிவோடு பொதுவெளியில் பேச முடியாது. இந்து மதம் ஒரு மதமல்ல; அது ஒரு வாழ்க்கை நெறி என்று உச்சநீதிமன்றமே கூறியிருக்கிறது என்று பேசி வந்தவர்கள் இப்போது வாயை மூடிக் கொண்டார்கள்.

‘சனாதன தர்மம் - இந்து மதப் பண்பாடு’ என்ற அடிப்படையில் தான் கட்சி நடத்துகிறீர்களா என்று எந்த ஒரு வைதீக ஆச்சார சீலராவது பா.ஜ.க.வை கேட்டிருக்கிறார்களா? இல்லை; மாறாக பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தே தீர வேண்டும் என்று வெறி பிடித்து நிற்கிறார்கள். இத்தகைய உணர்வு, தமிழர்களுக்கு இருக்கிறதா? ஏன், தமிழ்ப் பண்பாடு பேசும், வேத எதிர்ப்பு பேசும் தமிழ் தேசிய அமைப்புகளிடம் இருக்கிறதா? நான் அனைத்து அமைப்புகளையும் கூறவில்லை.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் - தமிழ்நாட்டின் தனித்துவம், சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதையைக் காப்பாற்ற பரந்துபட்ட வரலாற்று அணி ஒன்றை உருவாக்குவது வரலாற்றுக் கடமையாகிறது. ஆர்.எஸ்.எஸ். பாசிச சிந்தனை - அதன் அமைப்புக்கு மட்டும் அடங்கியிருக்கவில்லை. அதற்கும் வெளியே அது பரவி நிற்கிறது. பல்வேறு உருமாற்றங்களோடு அந்த நச்சு சிந்தனை, சமூகத்தில் விதைக்கப்பட்டு வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு நாம் எப்படி எதிர்வினையாற்றப் போகிறோம் என்ற திட்டமிடுதல்களும் அதற்கான செயல் உத்திகளும் தேவைப்படுகிறது!

தமிழ்நாட்டு மக்களில் கடவுள் மத நம்பிக்கைக் கொண்டவர்கள் தான் அதிகம். ஆனால் வடமாநிலத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இதில் துல்லியமான ஒரு வேறுபாடு உண்டு. தமிழ்நாட்டு மக்கள் கடவுள் மத பக்தியை மட்டுமே சார்ந்திருப்பதில்லை. அதுவே தங்கள் எதிர்காலத்தைக் காப்பாற்றி விடும் என்று வடநாட்டுக்காரர்களைப் போல் கண்மூடித்தனமாக நம்பாதவர்கள்.

தங்களுக்காக கல்வி, சமூக நீதி, வாழ்வுரிமையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு கடவுள் மதத்தை மட்டுமே நம்பியிருப்பவர்கள் அல்ல; இது பெரியார் இயக்கம் இந்த மண்ணில் உருவாக்கிய மிக முக்கியமான மாற்றம்.

இந்த நிலையில் ஒன்றிய ஆட்சியின் மோசமான பொருளாதாரக் கொள்கை - அதனால் மக்கள் படும் துயரம், நீட் திணிப்பு, உயர்கல்வி உரிமையில் தலையீடு போன்ற மக்கள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமைத் தந்து மக்களிடம் அதைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஒற்றை இந்தியாவை நோக்கி நாட்டை இழுத்துச் செல்வது வேதகால ஆட்சியை பார்ப்பனிய சர்வாதிகாரத்தை உருவாக்கி விடும் என்ற ஆபத்துகளையும் இழந்து வரும் மாநில உரிமைகளையும், சமஸ்கிருத, இந்தித் திணிப்புகளையும் எடுத்து விளக்கி, தன்னாட்சி - சுயாட்சிக் கொள்கையை மாற்றாக முன் வைத்து விளக்க வேண்டும்.

இந்து வெகு மக்கள் தான் ஒன்றிய ஆட்சியின் பொருளாதாரக் கொள்கையால் பாதிக்கப்படுகிறார்கள். இது எப்படி இந்து நலன் காக்கும் ஆட்சியாக இருக்க முடியும் என்ற கேள்வியை எழுப்ப வேண்டும்.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பு, பெட்ரோல், டீசல், கேஸ் வரி உயர்வு, சிறு தொழில்கள் நசிவு, வேலை இல்லாத திண்டாட்டம், கொரனா காலத்தில் ஒன்றிய ஆட்சியின் மோசமான நிர்வாகம், இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலான ‘இந்து’க்கள் தானே! என்று அவர்கள் பேசும் மொழியிலேயே பதிலடி தர வேண்டும்.

இந்த ஒடுக்கப்பட்ட உழைக்கும் இந்துக்களுக்கு உதவிக் கரம் நீட்டியது யார் என்பதை எடுத்து விளக்க வேண்டும்.

வேத மதம் பெண்களை மதச்சடங்குகளில் ஒதுக்கி வைத்து அவமதிப்பதை பெண்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

பார்ப்பனர் அனைவரும் கண்மூடித்தனமாக பா.ஜ.க.வை ஆதரிப்பதையும் அனைத்து ஜாதி இந்துக்கள் அர்ச்சகராவதற்கு பார்ப்பனர்கள் தடையாக இருப்பதையும் எடுத்து விளக்க வேண்டும்.

இது குறித்து விரிவாக நாம் சிந்திக்க வேண்டிய அவசியத்தை முதலில் உணர வேண்டும் என்றார், விடுதலை இராசேந்திரன்.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## வேண்டுமென்றே திருப்பி செலுத்தாத பெருமுதலாளிகள்

# வங்கிகளுக்கு பட்டை நாமம் 2.40 இலட்சம் கோடி

இந்திய வங்கிகளுக்கு வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள், செலுத்த வேண்டிய தொகை (Wilful loan defaulters) கடந்த பத்தாண்டுகளில் பத்து மடங்கு உயர்ந்துள்ளது, மார்ச் 31, 2012இல் ரூ. 23 ஆயிரம் கோடி என்ற அளவில் இருந்த இந்தத் தொகை மே 31, 2022 அன்று ரூ. 2 லட்சத்து 40 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. இந்த மாபெரும் கடன் மோசடிகளில் ஏபிஜி கப்பல் கட்டும் (ABG Shipyard) நிறுவனத்தின் புரொமோட்டர்கள் மற்றும் இரண்டு சகோதரர்கள் தான் மிகப் பெரிய தொகையை மோசடி செய்து முக்கியக் குற்றவாளிகளாகப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் கொண்டவர்கள்; ஆனால் கடனை செலுத்த மறுப்பவர்களை, வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் என்று இந்திய ரிசர்வ் வங்கி வரையறுக்கிறது. இந்த வகையில், 25 லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட கடன் நிலுவையில் உள்ள கணக்குகள் குறித்துச் செய்யப்பட்ட ஆய்வில் மார்ச் 31, 2022 வரை 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடன் மோசடி வழக்குகள் பதிவாகியுள்ளன. இவர்களில் ரிஷி அகர்வால், அரவிந்தாம், மெஹூல் சோக்ஸி மற்றும் சண்டேசரா சகோதரர்கள் என கடனைப் திருப்பிச் செலுத்தாதவர்களில் முக்கியமானவர்களாக உள்ளனர். ஏபிஜி ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தின் புரொமோட்டரான ரிஷி அகர்வால் சுமார் ரூ. 6 ஆயிரத்து 382 கோடி மதிப்பிலான கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார். இந்தியா வின் மிகப் பெரிய கடன் மோசடிகளில் இது முக்கியமானது. ஏபிஜி ஷிப்யார்ட் நிறுவனத்தைத் தொடர்ந்து ஆம்டெக் ஆட்டோ (Amtek Auto Limited) லிமிடெட் மற்றும் துணை நிறுவனங்கள் மூலம் அதன் உரிமையாளர் அரவிந்தாம் தலைமையில் இக் குழுமம் ரூ. 5 ஆயிரத்து 885 கோடி மதிப்பிலான கடனை திருப்பிச் செலுத்தவில்லை.

தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகளான சண்டேசரா சகோதரர்கள், நிதின் மற்றும் சேத்தன் ஆகியோர் இந்திய அரசின்படி இப்பட்டி யலில் தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளி களாக (FEO) மூன்றாவது இடத்தில் உள்ளனர். அவர்கள் தங்கள் நிறுவனமான ‘ஸ்டெர்லிங் குளோபல் ஆயில் ரிசோர்சஸ் பிரைவேட் லிமிடெட்’ மற்றும் அதன் துணை நிறுவனங்கள் வாங்கிய ரூ.3 ஆயிரத்து 757 கோடி மதிப்பிலான கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. கபில் மற்றும் தீரஜ் வாத்வான் (திவான் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (DHFL) மற்றும் அதன் துணை நிறுவனங்கள் வேண்டுமென்றே ரூ.2 ஆயிரத்து 780 கோடியை திருப்பிச் செலுத்தவில்லை. அடுத்ததாக சஞ்சய் மற்றும் சந்தீப் ஜுன்ஜுன் வாலா என்ற மற்றொரு சகோதரர்களின் நிறுவனமான ‘ரெய் அக்ரோ’ ரூ. 2 ஆயிரத்து 602 கோடி வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.

இவர்கள் தவிர மெஹுல் சோக்ஸியின் (கீதாஞ்சலி ஜெம்ஸ்), சஞ்சய் குமார் சுரேகாவின் (கான்காஸ்ட் ஸ்டீல் அண்ட் பவர்), அதுல் பஞ்ஜின் (பஞ்ச் லாயிட்) மற்றும் ஜதின் மேத்தாவின் (வின்சம் டயமண்ட்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்) ரூ. 2,000 கோடிக்கு மேல் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தாத பிற நிறுவனங்கள் ஆகும். இவர்களில் சோக்சியும் மேத்தாவும் கரீபியன் தீவுகளுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

இவ்வாறு இந்தியாவில் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் வைத்துள்ள நிலுவை தொகை மட்டும் சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கானதாக உள்ளது. இந்த மாபெரும் தொகையானது, சுகாதார அமைச்சகத்துக்கு 2022 பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்ட ரூ.86 ஆயிரத்து 200 கோடியைவிட 2.7 மடங்கு அதிகம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைகள் திட்டத்தின் (MGNREGA) கீழ் ஊரக வளர்ச்சி அமைச்சகத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் கோடியை விட இரண்டு மடங்கு அதிகம்.

மேலும், இந்த ரூ. 2 லட்சத்து 40 ஆயிரம் கோடியானது (29.7 பில்லியன் டாலர்கள்) 87 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பை (GDP) விட அதிகமாகும். இவ்வளவுக்கும் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் இந்த பட்டியலில் விஜய் மல்லையா, நீரவ் மோடி ஆகியோரின் பெயர்கள் இடம்பெறவில்லை.

மேலும், 25 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட நிலுவைத் தொகை களுடன் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் பட்டியல் மற்றும் தொகை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட் டுள்ளது. வங்கிகள் பொதுவாக இத்தகைய காரணங்களுக்கு அல்லது இந்தத் திட்டத்திற்கு என்றே கடன்களை வழங்கக்கூடிய நிலையில், அப்படி வாங்கப்பட்ட கடன்களை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்திய நிறுவனங்கள் தான் அதிகளவில் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ரூ. 2 லட்சத்து 40 கோடி கடன் மோசடி யில் 95 சதவிகிதம் பொதுத்துறை வங்கிகளில் (PSBS) வாங்கப்பட்ட கடன்களாக உள்ளன. அதிலும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (SBI) மற்றும் அதன் கூட்டாளி நிறுவனங்கள் வழங்கிய கடன்கள் 30 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளன. எஸ்பிஐ-க்குப் பிறகு, பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB), யூனியன் பேங்க் ஆப் இந்தியா (UBI) மற்றும் பேங்க் ஆப் பரோடா (BOB) ஆகியவை ஒவ்வொன்றும் நிலுவைத் தொகையில் 10 சதவிகிதத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்டுள்ளன.

நாட்டின் அனைத்து கடன் திருப்பிச் செலுத்தாத தொகைகளில் 34 சதவிகி தம் பங்கு வகிக்கும் மாநிலமாக மகாராஷ்டிரா உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில், மொத்த கடன் தொகையில் 17.5 சதவிகிதம் பங்குடன் தில்லி இரண் டாமிடத்திலும், 8.8 சதவிகிதம் திருப்பிச் செலுத்தாத கடன் தொகையுடன் மேற்கு வங்கம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

# பெரியார் பல்கலை முறைகேடுகளைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்




20.07.2022 புதன் காலை 11.00 மணி அளவில் பெரியார் பல்கலைக்கழகத்தின் சட்ட விதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து கண்டன கோரிக்கை ஆர்ப்பாட்டம் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், திராவிட பண்பாட்டு நடுவத்தின் பொறுப்பாளர் முல்லை வேந்தன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

நிறைவாக கொளத்தூர் மணி கண்டன உரையில், பெரியார் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையின் வினாத்தாளில் ஜாதி குறித்து கேட்கப்பட்டமையைக் குறித்தும், மாநில அரசின் அறிவுரைகளை மதிக்காமல் புதிய கல்வி கொள்கையை நேரடியாகவும், மறைமுகமாகவும் செயல்படுத்தி வரும் துனணவேந்தரின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் உரை நிகழ்த்தினார்.

சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. டேவிட் நன்றியுரை கூற ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது. ஆர்ப்பாட்டத்தை விளக்கி பொது மக்களுக்கு துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் ஏற்காடு, சேலம், கோவை, திருப்பூர், இளம் பிள்ளை, நங்கவள்ளி, மேச்சேரி, மேட்டூர் RS, மேட்டூர் நகரம், கொளத்தூர், காவலாண்டியூர், ஆத்தூர், தருமபுரி, மல்லிகுந்தம் ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.250
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th July 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN